**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**முன்னிலை : திருமதி.T.S.P ஜெயசுதா., M.L., (TN01090)**

**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தேனி.**

**2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 15ஆம் நாள் புதன்கிழமை.**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.456/2022**

**(CNR No. TNTH02 – 006637 – 2022)**

| | | | |
|---|---|---|---|
| 01. | குற்றம் முறையிடுபவர் | : | தமிழ்நாடு மாநில அரசு சார்பாக – காவல் ஆய்வாளர், அல்லிநகரம் காவல் நிலையம், குற்ற எண்.2611/2020 |
| 02. | குற்றம் சாட்டப்பட்டவர் பெயர், வயது, தந்தை பெயர் மற்றும் முகவரி | : | குமரேசன் (வயது 46/2020)<br>த/பெ.நாகையா சாமி,<br>சுப்பிரமணியர் கோவில் தெரு, வடபுதுப்பட்டி. |
| 03. | சம்பவ நாள் | : | 23.12.2020 |
| 04. | புகார் நாள் | : | 23.12.2020 |
| 05. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 23.12.2020 |
| 06. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | 23.12.2020 (காவல் நிலைய பிணையில் சென்றுள்ளார்) |
| 07. | குற்ற இறுதி அறிக்கை நாள் | : | 11.01.2021 |
| 08. | குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் | : | எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள். 294(b) மற்றும் 506(i)–ன்படியும் குற்றம் சுமத்தப் –பட்டுள்ளது. |
| 09. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | முதலாவதாக,<br>எதிரி புகார்தாரரை அசிங்கமாக பேசிய குற்றத்திற்காக – இ.த.ச. பிரிவு294(b)–ன்படியான குற்றச்சாட்டு. |



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:30:39 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | <u>இரண்டாவதாக</u>,<br>எதிரி புகார்தாரருக்கு குற்றமுறுமிரட்டல் விடுத்ததற்காக – இ.த.ச. பிரிவு. 506(i)–ன்படியான குற்றச்சாட்டு. |
| 10. | எதிரிகளின் பதில் | : | பொய் வழக்கு, குற்றவாளி இல்லை. |
| 11. | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 07.08.2024 |
| 12. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 13.07.2026. |
| 13. | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | எதிரி குற்றவாளி இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டது. |
| 14. | தீர்ப்பும் தண்டனையும் | : | **முடிவில்** இந்நீதிமன்றம் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 294(b) மற்றும் 506(i)–ன்கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு. 255(1)–ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்ககின்றது.<br>வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |
| 15. | வழக்கின் ஆவணங்களின் நகல்கள் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்ட நாள் | : | 09.01.2023 |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | – இல்லை – |

இவ்வழக்கு 02.12.2022ம் தேதியன்று தேனி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மாண்புமிகு மாவட்ட நீதிமன்ற நடவடிக்கை எண்.113/2024 நாள் 15.06.2024ன்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு,



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:30:48 +0530

இந்நீதிமன்றம் முன்பாக 13.07.2026ஆம் தேதியில் விசாரணைக்காக வந்த போது அரசு தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் திருமதி. V. அமுதா அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S.R. வெற்றிவேல் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு, சாட்சியங்கள், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

## தீர்ப்புரை

01. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:–

இவ்வழக்கின் வாதி பைஜில்ரகுமான் அன்னஞ்சி பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து வருகிறார். வாதி அன்னஞ்சியில் டூவீலர் ஒர்ஷாப் வைத்து மெக்கானிக்காக தொழில் செய்து வருகிறார். வாதியின் ஊரில் 22.12.2020–ம் தேதி மாலை சின்னமுத்து ராவுத்தர் மகன் சின்னவர் ராவுத்தர் என்ற 80 வயது முதியவர் இயற்கையான முறையில் மரணமடைந்துள்ளார். 23.12.2020–ம்தேதி காலை 10.30 மணிக்கு வாதியும் தீன் இலாஹி மற்றும் கணவாய்பீர் ஆகியோர்கள் மேற்படி முதியவரின் பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்காக வாதிதரப்பு பள்ளிவாசலுக்கும், வக்பு வாரியத்திற்கு பாத்தியப்பட்ட தேனி டூ பெரியகுளம் மெயின் ரோட்டில் போரஸ் மஞ்சள் காவி மில்லுக்கு எதிர்புறத்தில் அமைந்துள்ள கபூர்ஸ்தலத்தில் குழி தோண்டிக் கொண்டிருந்துள்ளார்கள். அப்போது எதிரி குமரேசன் என்பவர் அங்கு வந்து இது என்னுடைய இடம் இங்கு குழி தோண்ட நீங்க யாருடா தேவிடியா மகன்களா, அவுசாரி மகன்களா என்று தரக்குறைவான வார்த்தைகளால் திட்டியும், இந்த இடத்தில் குழி தோண்டினால் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிய குற்றம் புரிந்துள்ளார். எனவே



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:30:59 +0530

எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள். 294(b) மற்றும் 506(i)–ன்கீழ் காவல் ஆய்வாளர், அல்லிநகரம் காவல் நிலையம் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

02. மேற்படி குற்ற இறுதி அறிக்கையானது தேனி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி ஆஜரானவுடன் எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு. 207–ன்படி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

03. எதிரியிடம் இ.த.ச. பிரிவுகள் 294(b) மற்றும் 506(i)–ன்கீழ் குற்றச்சாட்டின் சரத்துக்கள் குறித்து விளக்கி வினவியபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்தார்.

04. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரியிடம் அரசு தரப்பில் எதிரிக்கு பாதகமாக உள்ள பொருண்மைகளை பொறுத்து விளக்கி வினவியபோது எதிரி அவற்றை மறுத்துரைத்ததார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:31:06 +0530

05. <u>அரசு தரப்பு வழக்கு மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு :–</u>

(i) அ.சா.1 தனது சாட்சியத்தில் தான் அன்னஞ்சி பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து ரிக்ஷா வாகனம் பழுதுபார்க்கும் கடையில் வேலை பார்த்து வருவதாகவும், கடந்த 22.12.2020ஆம் தேதி சின்னராவுத்தர் என்பவர் மரணமடைந்துவிட்டதால் அவரை அடக்கம் செய்வதற்காக ஜமாத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் தங்களுடைய அடக்கஸ்தலமான மஞ்சகாவி மில் எதிர்புறம் உள்ள இடத்திற்கு சென்று குழிதோண்டி அடக்கம் செய்வதற்கு வேண்டிய வேலைகளை செய்து கொண்டிருந்தபோது எதிரியுடன் சுமார் 10 நபர்கள் சம்பவ இடத்திற்கு வந்து இந்த இடத்தில் குழிதோண்ட கூடாது என்றும், அடக்கம் செய்யக்கூடாது என்றும் சொல்லி தங்களை தகாத வார்த்தைகளால் பேசியதாகவும், இங்கு அடக்கம் செய்தால் உங்களை கொலை செய்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அதனால் காவல்நிலையம் சென்று புகார் புகார் மனு அ.சா.ஆ.1ஐ கொடுத்ததாகவும், அந்த புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், மேற்படி சம்பவம் குறித்து போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 தனது சாட்சியத்தில், தான் அன்னஞ்சி பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து வருவாகவும், அ.சா.1 மற்றும் எதிரியை தனக்கு தெரியுமென்றும், கடந்த 22.12.2020ஆம் தேதி சின்னராவுத்தர் என்பவர் இறந்துவிட்டதாகவும், அவரின் உடலை அடக்கம் செய்வதற்காக மறுநாள் 23.12.2020ஆம் தேதி காலை 11.30 மணியளவில் தங்களது சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட அடக்கம் செய்யும் இடமான



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:31:12 +0530

அன்னஞ்சி விலக்கில் இருந்து 1/2கி.மீ தூரத்தில் உள்ள அடக்கஸ்தலத்தில் தாங்கள் அடக்கம் செய்து கொண்டிருந்ததாகவும், அப்போது அங்கு வந்த எதிரி மற்றும் சில நபர்கள் தன்னுடைய 5 சென்ட் இடம் சுடுகாட்டிற்கு பின்புறம் உள்ளதாகவும், அதனால் அதற்கு முன்புறம் உள்ள இடம் அனைத்தும் தனக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லி இந்த இடத்தில் அடக்கம் செய்யக்கூடாது என்று சொல்லி தகாத வார்த்தைகளால் அசிங்கமாக பேசியதாகவும், உங்களை ஆள் வைத்து அடித்துவிடுவேன் என்றும், சாயங்காலத்திற்கு மேல் இருக்கமாட்டீர்கள் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், மேற்படி சம்பவம் குறித்து அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 தனது சாட்சியத்தில் தான் அன்னஞ்சி பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து ஹோட்டலில் சர்வராக வேலை செய்து வருவதாகவும், அ.சா.1, அ.சா.2 மற்றும் எதிரியை தனக்குத் தெரியுமென்றும், கடந்த 22.12.2020ஆம் தேதி தங்களது ஊரைச் சேர்ந்த ஒருவர் இறந்துவிட்டதால் அவரை அடக்கம் செய்வதற்காக மறுநாள் தங்களது ஜமாத்திற்கு சொந்தமான பைபாஸ்ரோடு மஞ்சகாவில் மில் எதிர்புறம் உள்ள அடக்கஸ்தலத்தில் தாங்கள் அடக்கம் செய்வதற்கான வேலைகளை செய்து கொண்டிருந்ததாகவும், அப்போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் சில நபர்களுடன் சம்பவ இடத்திற்கு வந்து இங்கு அடக்கம் செய்யக்கூடாது என்று பிரச்சனை செய்ததாகவும், நீங்கள் அடக்கம் செய்யுமிடம் தன்னுடைய இடத்திற்கு முன்புறமாக உள்ளதால் அடக்கம் செய்யக்கூடாது என்று சொல்லி அசிங்கமாக பேசியதாகவும், பின்னர் துலுக்க



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:31:19 +0530

பயலே உன்னை வெட்டிவிடுவேன் என்று பேசியதாகவும், பின்னர் மேற்படி சம்பவம் குறித்து அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அ.சா.4 தனது சாட்சியத்தில் தான் அன்னஞ்சி பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து மார்க்கெட்டிங் வேலை செய்து வருவதாகவும், தான் 10ஆம் வகுப்பு வரை படித்துள்ளதால் தான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கடந்த 23.11.2022ஆம் தேதி மதியம் 12.30 மணியளவில் அல்லிநகரம் போலீசார் இஸ்லாமியர்களுக்கு சொந்தமான மஞ்சகாவில் மில் எதிர்புறம் உள்ள அடக்கஸ்லத்தில் அடக்கம் செய்யும்போது குமரேசன் என்பவர் தடுத்து சண்டை செய்தது சம்மந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து விசாரித்ததாகவும், பார்வை மகஜரில் தானும், மற்றொருவரும் கையொப்பம் செய்ததாகவும், அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.2** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அ.சா.5 தனது சாட்சியத்தில் தான் அன்னஞ்சி பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து கறிக்கடை வைத்து தொழில் செய்து வருவதாகவும், தான் 8ஆம் வகுப்பு வரை படித்துள்ளதால் தமிழில் கையொப்பம் செய்வது வழக்கமென்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கடந்த 23.12.2020ஆம் தேதி மதிய வேளையில் தேனி அல்லிநகர போலீசார் பள்ளிவாசல் தெருவில் விசாரணை செய்து கொண்டிருந்ததாகவும், போலீசார் சண்டை நடந்த விபரத்தை பற்றி கேட்டதாகவும், தான் விபரத்தை சொன்னதாகவும், அப்போது பார்வை மகஜரில் தான் கையொப்பம்



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:31:25 +0530

செய்ததாகவும், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், தன்னுடன் சேர்ந்து மேற்படி பார்வை மகஜரில் ஆரிப்ராஜா என்பவர் கையொப்பம் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) அ.சா.6 தனது சாட்சியத்தில் கடந்த 23.12.2020ஆம் தேதி தான் அல்லிநகரம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வளராக பணியிலிருந்தபோது அன்னஞ்சி பள்ளிவசால் தெருவை சேர்ந்த பைஜல் ரகுமான் என்பவர் காவல்நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அல்லிநகரம் காவல்நிலைய குற்ற எண்.2611/2020 பிரிவுகள். 294 (பி) மற்றும் 506 (1) இ.த.ச–படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஐ பதிவு செய்ததாகவும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பைஜல் ரகுமான், தீன் இலாகி, கனவாய் பீர் மற்றும் ரகமத்துல்லா ஆகியோர்களை விசாரித்து பிரிவு 161கு.வி.மு.ச.–ன்கீழ் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அதன்பின்னர் 12.30 மணியளவில் சாட்சிகள் ஆரிப் ராஜா மற்றும் ரபீக் ராஜா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4ஐ தயார் செய்ததாகவும், பின்னர் காவல்நிலையத்தில் ஆஜரான எதிரியை உரிய முறையில் கைது செய்து அல்லிநகரம் காவல்நிலைய பிணையில் விடுவித்ததாகவும், இறுதியாக விசாரணை முடித்து 11.01.2021ஆம் தேதி வழக்கின் எதிரியின் மீது பிரிவு 294 (பி) மற்றும் 506 (1) இ.த.ச–ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:31:30 +0530

**06. தீர்வுக்காணவேண்டிய பிரச்சனை –**

இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அய்யத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே இவ்வழக்கில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையாகும்.

**07. தீர்வுகாண வேண்டிய பிரச்சனை குறித்த பகுப்பாய்வு –**

(i) இவ்வழக்கின் எதிரியின் மீதான குற்றச்சாட்டு என்பது வாதியின் ஊரில் கடந்த 22.12.2020–ம்தேதி மாலை சின்னமுத்து ராவுத்தர் மகன் சின்னவர் ராவுத்தர் என்ற 80 வயது முதியவர் இயற்கையான முறையில் மரணமடைந்துள்ளவரை 23.12.2020–ம்தேதி காலை 10.30 மணிக்கு வாதியும் தீன் இலாஹி மற்றும் கணவாய்பீர் ஆகியோர்கள் மேற்படி முதியவரின் பிரேதத்தை நல்லடக்கம் செய்வதற்காக வாதிதரப்பு பள்ளிவாசலுக்கும், வக்பு வாரியத்திற்கு பாத்தியப்பட்ட தேனி டூ பெரியகுளம் மெயின் ரோட்டில் போரஸ் மஞ்சள் காவி மில்லுக்கு எதிர்புறத்தில் அமைந்துள்ள கபூர்ஸ்தலத்தில் குழி தோண்டிக் கொண்டிருந்துள்ளார்கள். அப்போது எதிரி குமரேசன் என்பவர் அங்கு வந்து இது என்னுடைய இடம் இங்கு குழி தோண்ட நீங்க யாருடா தேவிடியா மகன்களா, அவுசாரி மகன்களா என்று தரக்குறைவான வார்த்தைகளால் திட்டியும், இந்த இடத்தில் குழி தோண்டினால் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிய குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது இ.த.ச. பிரிவுகள். 294(b) மற்றும் 506(i)–ன்கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என்பதாகும்.

(ii) மேற்கண்ட அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர்.



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:31:42 +0530

இவர்களில் அ,சா,1 என்பவர் வழக்கில் புகார்தாரர் ஆவார். அ.சா.2 மற்றும் அ.சா.3 என்பவர் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைபடுத்தப்பட்டுள்ளனர். அ.சா.4 மற்றும் அ.சா.5 பார்வை மகஜர் சாட்சிகள் ஆவார்கள். அ.சா.6 வழக்கில் புலன் விசாரணை அதிகாரி ஆவார்.

(iii) இந்நீதிமன்றம் மேற்கண்ட சாட்சிகளின் சாட்சியம், வழக்கு ஆவணங்கள் மற்றும் இரு தரப்பு வாதுரை ஆகியவற்றை கவணிக்கும்போது இவ்வழக்கின் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகளின் மீது இவ்வழக்கின் எதிரியால் அ.சா.1 முதல் 3 சாட்சிகள் தாக்கி காயம் ஏற்ப்பட்டதாக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருக்கும்போது அவரிடமிருந்து இதே சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டு அது குற்ற எண் 2612/2020ஆக பதியப்பட்டு சி.சி. எண். 616/2022ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பது தெரிகிறது.

(iv) இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் மட்டுபே எதிரி தங்களை ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியமளித்துள்ளார்கள். இவர்களின் சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் அரசு தரப்பில் வேறு தனி நபர் சாட்சி ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடதக்கது. மேலும் எதிரி என்ன ஆபாசமான சொற்களை பயன்படுத்தினார் என்பது அ.சா.ஆ.1 புகாரில் குறிப்பிடபடவில்லை. மேலும் வழக்கின் சாட்சியத்தில் எதிரி பேசியதாக சொல்லப்படும் ஆபாசமான சொற்களால் அவருக்கும் அருவறுப்பு



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:31:48 +0530

ஏற்பட்டதாக எவ்வித சாட்சியமும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் முன்வைக்கவில்லை. மேலும் எதிரி குற்றமுறுமிரட்டல் விடுத்ததால் தாங்கள் அச்சத்திற்கு உள்ளானதாக எவ்வித சாட்சியமும் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு துலங்கவில்லை. எனவே, இந்நீதிமன்றம் வேறு தனிநபர் சாட்சியத்தின் மூலம் உறுதியூட்டப்படாத அ.சா.1ன் சாட்சியத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரியை குற்றவாளி என்று தீர்மானிக்க இயலாது என்று முடிவிற்கு வருகின்றது.

**08. வழக்கின் தீர்வு**

**முடிவில்** இந்நீதிமன்றம் எதிரியை இ.த.ச. பிரிவுகள். 294(b) மற்றும் 506(i)–ன்கீழ் அவர் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு. 255(1)–ன்கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 15–ஆம் தேதி என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:31:54 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், தேனி.

**<u>01. அரசு தரப்பு சாட்சிகள் :-</u>**

| | | | |
|---|---|---|---|
| 1) | அ.சா.1 | : | பைசில் ரகுமான் |
| 2) | அ.சா.2 | : | தீன் இலாஹி |
| 3) | அ.சா.3 | : | கனவா பீர் |
| 4) | அ.சா.4 | : | ஆரீப் ராஜா |
| 5) | அ.சா.5 | : | ரபீக் ராஜா |
| 6) | அ.சா.6 | : | கௌதமன் (காவல் ஆய்வாளர்) |

**02. <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| வரிசை எண் | ஆவண வரிசை எண் | : | தேதி | ஆவணங்களின் விபரங்கள் | யார் மூலம் கு.செ. |
|---|---|---|---|---|---|
| 1) | அ.சா.ஆ.1 | : | 23.12.2020 | புகார் மனு | அ.சா.1 |
| 2) | அ.சா.ஆ.2 | : | 23.12.2020 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| 3) | அ.சா.ஆ.3 | : | 23.12.2020 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| 4) | அ.சா.ஆ.4 | : | 23.12.2020 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |

03. <u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u> – இல்லை.

04. <u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>– இல்லை.

JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:32:03 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை
நடுவர், தேனி.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

<u>ஆண்டுபட்டிகை வழக்கு எண்.616/2022</u>

<u>வழக்கின் சுருக்கம்</u>

<table>
<tr><td>i.</td><td>எதிரி அடைப்புக் காவலில் இருந்த காலம்</td><td colspan="3">காவல் நிலைய பிணை</td></tr>
<tr><td>ii.</td><td>குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கலான நாள்</td><td colspan="3">11.01.2021</td></tr>
<tr><td>iii.</td><td>வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அனுப்பப்பட்ட நாள்</td><td colspan="3"></td></tr>
<tr><td>iv.</td><td>எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வினவப்பட்ட நாள்</td><td colspan="3">24.01.2023</td></tr>
<tr><td>8v.</td><td>வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பல்வகை மனுக்களும் அவற்றின் முடிவும் (குவிமுச பிரிவு 317–ன் கீழான மனு நீங்கலாக)</td><td colspan="3">---</td></tr>
<tr><td rowspan="7">vi.</td><td rowspan="7">சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>சாட்சிகள்</td><td>மு.வி.</td><td>கு.வி.</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>07.08.2024</td><td>23.04.2025</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>07.08.2024</td><td>23.04.2025</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>07.08.2024</td><td>04.06.2025</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>07.08.2024</td><td>04.06.2025</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>06.09.2024</td><td>06.09.2024</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>10.10.2024</td><td>10.10.2024</td></tr>
<tr><td>vii.</td><td>எதிரி கு.வி.மு.ச. பிரிவு 313–ன்கீழ் வினவப்பட்ட நாள்</td><td colspan="3">15.10.2024</td></tr>
<tr><td>viii.</td><td>எதிரி தலைமறைவாக இருந்த காலம் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜரான/ ஆஜர் படுத்தப்பட்ட காலம்</td><td colspan="3">---</td></tr>
<tr><td>ix.</td><td>மேல் நீதிமன்றங்கள் வழங்கிய ஸ்டே உத்தரவு மற்றும் அதன் முடிவும்</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>

JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:32:09 +0530

| | | |
|---|---|---|
| x. | தீர்ப்புரை நாள் | 15.07.2026 |

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.07.15 11:32:15 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை
நடுவர், தேனி.

தலைமை குற்றவியல் நீதித்துறை

நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C. No.456/2022

தீர்ப்புரை நாள் 15.07.2026